**C.P.No.**46/2018, **Dated.**26.09.2019.

ம.சா.1 பரமசிவம், சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.

நான் பணி ஓய்வு பெறும்போது, எதிர்மனுதாரர் போக்குவரத்து கழகத்தில் மேலாளராக பணிபுரிந்தேன் என்று சொன்னால் சரிதான். எனக்கு கீழ் யார் பணி செய்தார்கள் என்றால், யாரும் பணிபுரியவில்லை. போக்குவரத்து ஆய்வாளர் சொல்லும் பணியை நான் செய்வேன். ஓட்டுனர், நடத்துனர், டிக்கெட் பரிசோதகர் ஆகியோர் எனக்கு கீழ் பணிபுரிந்தவர்கள் என்று சொன்னால் சரிதான். மேற்குறிப்பிட்ட மூன்று பேரும் ஏதேனும் தவறு செய்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க எனக்கு அதிகாரம் உள்ளதா என்றால், நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்ய எனக்கு அதிகாரம் உள்ளது. நான் ஓய்வு பெறும்போது வகித்து வந்த மேலாளர் எனும் பதவி, தொழிலாளர் எனும் வரையறைக்குள் வராது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு தொழிலாளர் எனும் வரையறைக்குள் வராத காரணத்தினால், இம்மனுவை தாக்கல் செய்ய ஆள்வரை இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் 30.06.2015 அன்று பணி ஓய்வு பெற்றேன் என்றால் சரிதான். 01.09.2013 ஊதிய ஒப்பந்தம் படி, நான் திருத்திய ஓய்வூதியம் பெற்றுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. 02.01.2018 அன்று தகுதி பெறும் முன்கூட்டு தொகையான ரூ.3,56,303/- தொகை, என்னுடைய வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுவிட்டது என்று சொன்னால், மொத்த தொகையும் வழங்கப்பட்டுவிட்டது, ஆனால் ஒரே தவணையில் வழங்கப்படவில்லை, வெவ்வேறு கால கட்டங்களில் வழங்கப்பட்டது. அகவிலைப்படி 119 சதவீதத்திலிருந்து 139 சதவீதமாக உயர்த்தி, அந்த வித்தியாசத்தின் அடிப்படையில் அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும் என்று இம்மனுவில் நான் கோரியுள்ளேன் என்றால் சரிதான். உயர்த்தப்பட்ட அகவிலைப்படியை 26.08.2019 ஆம் தேதிய அரசாணைப்படி உயர்த்தி வழங்கலாம் என்று உத்தரவிடப்பட்டது என்று சொன்னால் அதுப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தொகையானது நிர்வாகத்தின் நடவடிக்கையின்படி அனைவருக்கும் வழங்கப்படும்போது, எனக்கும் வழங்கப்படும் என்று சொன்னால், அந்த நடவடிக்கைப் பற்றி எனக்கு தெரியாது.

Sd/- Paramasivam (PW1)

Sd/- N. Logeswaran.
Presiding Officer,
Labour Court, Salem.